செ.வெ.எண்: 01 நாள்:01.03.2017

# சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் பொது மக்கள் மிகுந்த பயன்பெறுவார்கள் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பெருமிதம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 69வது பிறந்தநாளினை முன்னிட்டு சுகாதாரத்துறையின் சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இம்மருத்துவ முகாமினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் 69வது பிறந்தநாளினை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் 690 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம் ஆவூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி, குளத்தூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவ முகாம் மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு மருத்துவ முகாமில் ஸ்கேன் பரிசோதனை, இ.சி.ஜி பரிசோதனை, இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை, சர்க்கரை பரிசோதனை, கர்ப்பப்பை புற்றுநோய் பரிசோதனை, சளி பரிசோதனை, எச்.ஐ.வி. பரிசோதனை, பொது மருத்துவ பரிசோதனை, இருதய சிறப்பு பரிசோதனை, கல்லீரல் மற்றும் குடலியல் பரிசோதனை, மூட்டுவலி மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை, கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை,இருதய நோய் சிகிச்சை, குழந்தைகள் நல சிகிச்சை உள்ளிட்ட அனைத்து வகையான மருத்துவ பரிசோதனைகளும் மற்றும் ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. மேலும் பரிசோதனைகளில் தீவிர நோய் தொற்று கண்டறியப்பட்டால் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளதுடன் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நபர்களுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்யப்படும்.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டதுடன், ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டது. இதே போன்று சுகாதாரத்துறையின் சார்பில் பல்வேறு சுகாதார திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் பிறவிகுறைபாடு கண்டறிதல், மார்பக, கர்ப்பப்பை வாய் பரிசோதனை மற்றும் புற்றுநோய் கண்டறிதல் போன்ற பரிசோதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு நோய்களை உடைய புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு நிதியுதவி தொகை ரூ.12000 லிருந்து ரூ.18000 மாக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இம்மருத்துவ முகாம் மூலம் அனைத்து பொது மக்களும் மிகுந்த பயன் பெறுவதுடன் பரிசோதனைகள் மேற்கொண்டு அனைவரும் நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), இணை இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் ஊரகநலப்பணிகள்) மரு.ஷம்சாத்பேகம், துணை இயக்குநர் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை),மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் துணைத் தலைவர் திரு.இரா.ராஜசேகரன், ஆராய்ச்சி மருத்துவர் மரு.சுபாஷ்காந்தி, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர்கள் திரு.திருமூர்த்தி, திரு.ராமு, ஆத்மாக்குழுத் தலைவர்கள் திரு.பழனியான்டி, திரு.பால்ராஜ், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் திரு.ராமசாமி, திரு.கார்த்திக்பிரபாகரன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**